ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

22.01.2026

1. அற்புதம் அற்புதம் அரங்கன் கண்டேன்
ஆற்றலாய் தொண்டாற்றும் என் மக்கள் கண்டு
அற்புதம் நிகழ ஒவ்வொரு விழாவிலும்
அரங்கன் யான் வருகின்ற மக்கள் வழியே

2. வழிதனில் யான் ஏற்ற சீடர் உருவில்
வந்து செல்கிறேன் பிரணவக் குடிலில்
தெளிவுபட தொண்டாற்றும் நிலையை
தருமத்தை கண்டு வியக்கின்றேன் அப்பா

3. அப்பனே அரங்கன் யான் நிர்வகிப்பது போல்
ஆற்றல்பட நடக்கும் நிர்வாகம் கண்டு
காப்புதந்தும் ஒப்புகொண்டும் அரங்கன் யான்
கருணை கொண்டும் உங்களுடன் இருக்கின்றேன்

4. இருக்கவே விசுவாவசு கலை திங்கள்
ஈராம் குருவார அருளாசி தன்னை
கருத்தாக அருட்சுவடி வழியில்
கண்டுரைப்பேன் அரங்கன் யானும்

5. யானுரைக்க ஞானியர் படைகள்
ஓங்காரக் குடிலை அலங்கரித்து வர
ஞானம் வேண்டி பாதுகாப்பு வேண்டி
நாடிவரும் மக்கள் அனைவருக்கும்

6. அனைவருக்கும் சூட்சும வடிவில்
அவரவரும் வேண்டும் ஞானிகள்
துணைவந்து கேட்டும் வரமும்
தொடர் வெற்றி காண அருள்புரிவர்

7. அருளவே அன்னதான சேவையில்
அணுகிப் பொருளுதவி செய்திட
இருளெனும் கரும வினைகளும்
இருக்க இடம் தெரியா அகன்று மேவியே

8. மேவியே பிறவித்தன் நோக்கமதை
மேலவர் துணைபட அறியவும்
அவணியில் சூட்சுமம்பல விளங்கி
அரங்கன் என் அனுகூலம் கூடி

9. கூடியே பெரும் பேற்றடைகின்ற
குறைவிலா சர்வபலம் பெறுவர்
நாடியே வருகின்ற மக்கட்கு
ஞான தீட்சையாக நன்மை தருகின்ற

10. தருகின்ற பல சூட்சும தீட்சைகள்
தருகின்றேன் சீடன் ராம்குமார் கரம்வழி
வருமுலகில் மக்களெல்லாம் ஏற்று
வணங்கிட வாஞ்சைபட நடந்திட

11. நடந்திட சகலவகை தேற்றமும்
ஞானமாகவும் சர்வ பலமும் ஆகவும்
தடையின்றி வரமாக வந்து சேர
தரணியில் யாவரும் ஞானி ஆவர்

ஆறுமுக அரங்கன் யானருளிய குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி